அடிமை விலங்குடைக்கும் நேரமிது அலையென வாருங்கள்
புதிய வரலாறு எழுதிடுவோம் புயல் என வாருங்கள் 2
புலம் பெயர் தமிழினமே புலிகளும் பலம் பெறுமே
புதிய வரலாறு எழுதிடுவோம் புயல் என வாருங்கள்

தங்கத் தமிழீழம் எங்கள் சொத்தட
பகையின் காலடியில் பாரடா
உன்னை பெற்ற தமிழ்அன்னை விழிகளில்
வழியும் ரத்த நீர் ஏனடா 2
விழித்தெழு தமிழா விழித்தெழு
புலம்பெயர் தமிழா விழித்தெழு 2
புலிகளின் கரங்களும் பலம் பெறவேண்டும்
புதிய வரலாறு எழுதிடுவோம் 2

அடிமை விலங்குடைக்கும் நேரமிது அலையென வாருங்கள்
புதிய வரலாறு எழுதிடுவோம் புயல் என வாருங்கள்

தேசத்தின் விடியலை சுமந்து அங்கு
தேகத்தில் களத்திலே வெடிப்பவர்
வான் படை கொண்டொரு
வானகர் கோட்டைக்குள்
வேட்டுக்கள் தீர்த்திட்டு திரும்புவர் 2
விழித்தெழு தமிழா விழித்தெழு
புலம்பெயர் தமிழா விழித்தெழு 2
புலிகளின் கரங்களும் பலம் பெறவேண்டும்
புதிய வரலாறு எழுதுவோம்

அடிமை விலங்குடைக்கும் நேரமிது அலையென வாருங்கள்
புதிய வரலாறு எழுதிடுவோம் புயல் என வாருங்கள்

தலைவன் கரங்களால் ஈழத்தலைநகரில்
ஏற்றும் கொடி பறக்கும் நம்படா
தமிழன் புலிக்கொடி உலகக் கொடியிடையில்
உயர்ந்து பறக்கும்நாள் உண்டடா
விழித்தெழு தமிழா விழித்தெழு
புலம்பெயர் தமிழா விழித்தெழு 2
புலிகளின் கரங்களும் பலம் பெறவேண்டும்
புதிய வரலாறு எழுதுதிடுவோம் 2

அடிமை விலங்குடைக்கும் நேரமிது அலையென வாருங்கள்
புதிய வரலாறு எழுதிடுவோம் புயல் என வாருங்கள்